RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22s114

OPEN ACCESS

# நெய்தல் நில மக்களின் புழங்கு பொருட்கள்

**கோ. பாலமுருகன் [அ, *]**

[அ] தமிழ்த்துறை, விவேகானந்த கல்லூரி, திருவேடகம், மதுரை-625234, தமிழ்நாடு, இந்தியா.

# Artefacts of The People of Neydal Region

**G. Balamurugan [a, *]**

[a] Department of Tamil, Vivekananda College, Tiruvedakam West, Madurai–625234, Tamil Nadu, India.

* Corresponding Author: balatphd@gmail.com

Received: 15-03-2021
Revised: 21-12-2021
Accepted: 22-12-2021
Published: 10-02-2022

Check for updates

**ABSTRACT**

Artefacts are the essential things to human day today life. This list of commodities includes all the materials which can be used by human beings. The natural habits and cultures of the ancient people can be easily understood through this artefacts, from the materials used by construction department to build the living habitats of the people who lived during sangam period, the vehicles used to travel, the web tools used for business, the wooden furniture and sharpened chisel like tools used for security, the vechicles used for commercial purposes and so and so. This study aims to clarify the cultural habits and social values that are expressed through the ancient peoples used Artefacts such as clothing, jewels and household items by both men and women.

**Keywords:** Artefacts, Natural habits, Culture, Neydal Region, Sangam Period.

## முன்னுரை

சங்க காலத்தில் கடலும் கடல் சார்ந்த பகுதியினை தங்களின் வாழ்க்கைக்கு ஆதாரமாகவும், வாழும் இடமாகவும் கொண்டு வாழ்ந்தவர்கள் நெய்தல் நில மக்களான பரதவர்கள் ஆவர். இவர்களின் முதன்மையான தொழில் கடல்மேல் வேட்டம் சென்று மீன் பிடித்து வருவது ஆகும். அசாதாரணமான வாழ்க்கையினை மேற்கொண்ட இப்பரதவர்களின் புழங்கு பொருட்கள் பற்றியும், அதன் வாயிலாக வெளிப்படக் கூடிய பண்பாட்டு நிகழ்வுகளையும், சமூக மதிப்புக்களையும் ஆய்ந்து வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

புழங்கு பொருட்கள் என்பது பெரும்பான்மையும் பொருள்சார் பண்பாட்டில் அடங்கக் கூடியதாக இருக்கும். பொருள்சார் பண்பாடு என்பது “மக்கள் அவர்களின் பயன்பாட்டிற்காக ஏற்படுத்திக் கொள்ளும் அனைத்துப் பொருள்களும் பொருள்சார் பண்பாட்டுக் கூறுகள் ஆகும். ஆய்வு செய்யப்படும் சமுதாயத்தின் பொருள்சார் பண்பாட்டைப் பற்றிய தரவுகள் மிகவும் பயனுள்ளவை. வீடுகளின் அமைப்பு, அன்றாடம் பயன்படுத்தப்படும் பொருட்கள், வீட்டுச்சாமான்கள், ஆடைகள், அணிகலன்கள், போக்குவரத்துக் கருவிகள், தொழிற்கருவிகள், தற்காப்புக் கருவிகள் போன்ற பொருட்களைப் பற்றிய தரவுகள் சமுதாயப் பண்பாட்டு முறைகளை அறிய உதவும். மேலும் இவை மக்களின் சிந்தனை முறை, உணர்வு, அறிவு, அழகுணர்வு போன்ற பல பொருள்சாராப் பண்பாட்டையும் வெளிப்படுத்துவனவாக உள்ளன.” இந்த நிலைகளில் நெய்தல் நில மக்களிடம் காணப்படும் பொருள்சார் பண்பாடுகளைப் பற்றி அறிவது அச்சமுதாயப் பண்பாட்டை விளக்குவதற்கும், அச்சமூக மதிப்பை அறிந்து கொள்வதற்கும் ஏதுவாக அமையும் (Robert Sathyajoseph, 1996).

## பரதவக் குடியிருப்புக்களின் அமைப்பு

மனிதக் குடியிருப்புக்களின் அமைப்பு பெரும்பாலும் சுற்றுச்சூழல் சார்ந்து அமைந்திருப்பதை அவ்வத் திணைப் பாடல்கள் உணர்த்தி நிற்கின்றன. பண்டைக் காலத்தில் வாழ்ந்த மக்களின் இருப்பிடங்களையும், இருப்பிடங்களின் அமைப்புக்களையும் அறிந்து கொள்வதற்குச் சங்க இலக்கியங்கள் மிகவும் பயன்பாட்டுத் தன்மை உடையதாயிருக்கின்றன. நிலத்தினுடைய இயற்கையமைப்புக்குத் தகுந்தபடி அக்கால மக்கள் தங்களின் வாழ்க்கை முறையினை அமைத்துக் கொண்டது மட்டுமின்றி, அவர்களின் உறைவிடங்களும் அவ்வாறே அமைந்தன. நெய்தல்நில மக்கள் அமைத்த குடியிருப்புக்கள் நெய்தல் நிலப் பகுதிகளில் கிடைத்த பொருட்களைக் கொண்டு அமைக்கப்பட்டதாயிருந்தன. சங்க காலத்தில் கடலில் மீன்பிடித்தல் தொழிலினை முதன்மையானதாகச் செய்து வாழ்ந்த பரதவர்கள், அந்நிலத்தில் கிடைத்த புல், மரங்கள், ஓலை ஆகியனவற்றைக் கொண்டு உறைவிடங்களை அமைத்துக் கொண்டனர். கடற்கரையோரங்களில் அமைக்கப்பட்டிருந்த அவர்களின் குடியிருப்பு,

“கண்டல் வேலிக் கழிசூழ் படப்பை

முண்டகம் வேய்ந்த குறியிறைக் குரம்பைக்

கொழுமீன் கொள்பவர் பாக்கம் கல்லென” (நற்.207)

என்று கண்டல் மரங்களை வேலியாகவுடைய உப்பங்கழி சூழ்ந்த இடங்களில் முள்ளிகளால் வேயப்பட்ட கூரைகளை உடைய தன்மையினை வெளிப்படுத்தி நிற்கின்றன. மேலும்,

“ஆடுஅரை ஒழித்த நீடுஇரும் பெண்ணை

வீழ்கா ஓலைச் சூழ்சிறை யாத்த

கானல் நண்ணிய வார்மணல் முன்றில்” (நற்.354)

எனவரும் உலோச்சனாரின் பாடலடிகள், உலர்ந்த அடி மரத்தினையுடைய காற்றால் ஒழிக்கப்பட்ட நீண்டுயர்ந்த பனையின் முற்றிய ஓலையால் சுற்றுவேலி கட்டப்பட்ட வெள்ளிய மணல் பரந்த முன்றிலினை உடைய நிலையினைக் காட்சிப்படுத்துவதன் வழி அம்மக்களின் குடியிருப்புப் பகுதியினை ஓரளவு அறிந்து கொள்ள இயலுகிறது.

## விளக்கு (கிளிஞ்சல்)

விளக்கேற்றல் என்பது மின்சாரம் இல்லா அக்காலகட்டத்தில் இருந்தமையில் வியப்பில்லை. இருப்பினும் இந்நில மக்கள் இருளினைப் போக்குவதற்காக மட்டுமன்றி, மாலை நேரத்தினை வரவேற்கும் பொருட்டும் விளக்கேற்றியுள்ளனர்.

“பகல்கெழு செல்வன் குடமலை மறையப்

புலம்புவந்து இறுத்த புன்கண் மாலை

இலங்குவளை மகளிர் வியல்நகர் அயர

மீன்நிணம் தொகுத்த ஊன்நெய் ஒண்சுடர்” (நற்.215)

என்ற மதுரைச் சுள்ளம்போதனாரின் பாடலடிகள், நெய்தல் நில இல்உறை மகளிர் மாலை நேரத்தை வரவேற்கும் பொருட்டு, மீனின் ஊனிலிருந்து பெறப்பட்ட நெய்யினால் விளக்கு ஏற்றி வழிபட்டு வரவேற்றமையினைப் பகர்ந்து நிற்கின்றன. மேலும், இவ்விளக்கானது,

“மீன்நெய் அட்டிக் கிளிஞ்சில் பொத்திய

சிறுதீ விளக்கில் துஞ்சும் நறுமலர்” (நற்.175)

என்று ‘கிளிஞ்சல்’ என்னும் சிப்பியில் ஏற்றியமையினைப் புலவர்கள் பதிவு செய்துள்ளமை

குறிக்கத்தக்கது. இவ்விளக்கானது நெய்தல் நில மக்களோடு மிகவும் நெருக்கமான தொடர்புடையதாகவும், பரதவர்களின் பண்பாட்டு நிகழ்வினை எடுத்து இயம்புவதாகவும் உள்ளது.

## ஊஞ்சல்

ஊசலாடல் என்பது மகளிர் விளையாடும் ஆட்டங்களில் ஒன்று. மரக்கிளையில் கயிறுகட்டி, அந்தக் கயிற்றில் ஒரு இருக்கையினை அமைத்து, அதில் ஒருவர் உட்கார, மற்றொருவர் ஆட்டிவிடுவர். இது பண்டைக் காலத்தில் இருந்து இன்று வரையுள்ள ஒரு ஆட்டமாக இருந்துவருகிறது. நெய்தல் நிலத்தில் உள்ள ஊசலாடல் என்பது நெய்தலுக்குரித்தான கருப்பொருட்களோடு பிணைப்பு பெற்றுள்ளமையைப் புலவர்கள் பதிவுசெய்துள்ளனர்.

“இனமீன் இகன்மாற வென்ற சினமீன்

எறிசுறா வான்மருப்புக் கோத்து நெறிசெய்த

நெய்தல் நெடுநாரப் பிணித்துயாத்துக் கையுளர்வின்

யாழிசை கொண்ட இனவண்டு இமிர்ந்து ஆர்ப்பத்

தாழாது உறைக்கும் தடமலர்த் தண்தாழை

வீழ்ஊசல் தூங்கப் பெறின்” (கலி.131,6-11)

என்னும் இப்பாடலடிகள், இனமீன்களை வென்ற சுறாமீனின் கொம்புகளைக் கொண்டு பலகைசெய்து, தாழை விழுதால் ஆகிய ஊசல்கயிற்றில் பிணைத்துத் தொங்கவிட்டு அதில் நெய்தல் மலரினால் தொடுக்கப்பட்ட மாலையைச் சூட்டி ஆடுகின்ற மரபினை இயம்பி நிற்கின்றன.

## ஆடை அணிகலன்கள்

‘ஆடையில்லா மனிதன் அரை மனிதன்’, ‘ஆள்பாதி ஆடைபாதி’ என்பன போன்ற சொலவடைகள் ஆடையின் இன்றியமையாமையை உணர்த்தும் பொருட்டு எழுந்தவையாகும். மனிதன் என்று தன்னையறிந்து சிந்திக்கத் தொடங்கினானோ அன்று முதல் தன்னுடைய மானத்தைக் காக்க வேண்டும்; என்ற உணர்வு அவனுக்கு ஏற்பட்டது. “மானத்தை மறைத்துக் கொள்ள முற்பட முனைந்த போது இயற்கையாகக் கிடைத்த பொருள்களான இலைதழைகளால், மாலை, கண்ணி முதலியவற்றைத் தொடுத்துக் கழுத்திலும், மார்பிலும், தலையிலும் அணிந்து கொண்டான். தோலை ஆடையாக அணிந்த மனிதன் இலைதழை மலர் முதலியவற்றைத் தொடுத்து மாலையாகவும், கண்ணியாகவும் அணிந்தான் ” என்பர் (Perumalsamy, 2007).

இதேபோல் தன்னை அழகுபடுத்திக் கொள்ள முனைந்த மக்கள் சிலவகையான அணிகலன்களைத் தங்களது உடலுறுப்புகளில் அணிந்து மகிழ்ந்துள்ளனர். இயற்கையாகக் கிடைத்த மலர்களையும், உலோகத்தால் செய்யப்பட்ட பல்வேறு வடிவம் கொண்ட அணிகலன்களையும் நெய்தல் நில மக்கள் அணிந்துள்ளனர். இதன் வாயிலாக “ஒரு நாட்டின் பண்பாட்டையும் நாகரிகத்தைக் காட்டும் பலவற்றுள் ஆடைகளும் அணிகளும் சிறந்த இடம் பெறுகின்றன. அணிகள் அழகூட்டும் என்பது அசையா நம்பிக்கையாகும். பழந்தமிழகத்தில் எந்த உலோகங்களில் அணிகள் செய்யப்பட்டன என்பதும், அவைகட்கு அவர்கள் சூட்டிய பெயர்கள் என்ன என்பதும், இன்ன பிறவும் பழைய தமிழிலக்கியங்களிலிருந்தும், சில தோண்டி எடுக்கப்பட்ட புதைப்பொருள்களிலிருந்தும் ஓரளவு அறியலாம்” என்பர் ஆராய்ச்சியாளர்கள்.

சங்ககாலம் என்பது பல்வேறு நூற்றாண்டுகளில் வாழ்ந்த மக்களின் கூட்டு வாழ்வைத் தன்னுள் உள்ளடக்கியவை ஆகும். அக்கால கட்டத்தில் சமூக வளர்ச்சி பல படிநிலைகளால் மாற்றம் பெற்றிருக்கும். அவ்வகையில் நோக்கும் போது நெய்தல் திணைப் பாடல்களில் சுட்டப்பெற்றுள்ள மக்களின் ஆடை அணிகலன்கள், பாடல்கள் எழுந்த காலகட்டத்திற்கு ஏற்றவாறு மாற்றம்

பெற்றிருப்பதை ஒருவாறு உணரமுடிகிறது. தழையினால் செய்யப்பட்ட ஆடைகள் முதல் நூலினால் நெய்யப்பட்ட ஆடைகள் வரை உள்ள காலகட்டங்களைக் குறிக்கும் தன்மையில் பாடல்கள் எழுந்துள்ளமையினை இதன்வழி அறியமுடிகிறது.

## ஆடைவகைகள்

கடல் சார்ந்த பகுதிகளில் வாழ்ந்த பரதவ மக்களிடையே இலைதழைகளால் ஆன ஆடைகள் பயன்பாட்டில் இருந்துள்ளன. இவற்றுள் தழையாடைகள் அணிந்த செய்திகளே பெரும்பான்மையாகச் சுட்டப்பெற்றுள்ளன.

## தழையாடை

இயற்கையாய்க் கிடைக்கக்கூடிய பசிய இலைதழைகளைப் பறித்து அதிலிருந்து ஆக்கப்பட்ட ஆடை தழையாடை எனப்படும். பெண்களே பொதுவாகத் தழையாடை அணிந்து காணப்பெற்றுள்ளனர். ஆண்கள் தழையாடை அணிந்தமைக்கான சான்றுகள் நெய்தல் பாடல்களில் குறிக்கப்படவில்லை. பெண்கள் தங்கள் தோழிமார்களுடன் அதிகாலையில் கடற்கரைச் சோலைக்குச் சென்று அங்குள்ள நெய்தல் பூவோடு வேறு நிறங்களையுடைய பூக்களையும், தளிர்களையும் பறித்துத் தொடுத்துள்ளனர். இந்நிலையினை

"கானல் ஆயமொடு காலைக் குற்ற

கள் கமழ் அலர தண்ணறுங் காவி

அம்பகை நெறித்தழை அணிபெறத் தைஇ" (நற்.123)

என்ற காஞ்சிப்புலவனாரின் பாடலடிகள், தெளிவுறுத்திக் காட்சிப் படுத்துவதிலிருந்து உணர்ந்துகொள்ள முடிகின்றது. பெரும்பாலும் பெண்கள் ஞாழல் மரத்தின் தழைகளைப் பறித்து அணிந்த செய்திகளே அதிகமாகச் சுட்டப்பெற்றுள்ளன. ஆண்கள் தழையுடை அணிந்தமைக்கான சான்றுகள் இல்லை. ஆனால் தழையாடையினைத் தலைவிக்கு அணிவித்துச் சென்றுள்ள நிலையினையும், தலைவியின் தழையுடைக்காக ஒரு நாட்டினையே விலையாகக் கொடுத்த செய்தியினையும் சுட்டுவதிலிருந்து தழையாடையின் மதிப்பினை அறியமுடிகிறது.

"கொடுங்கழை நிவந்த நெடுங்கால் நெய்தல்

அம்பகை நெறித்தழை அணிபெறத் தைஇத்

தமியர் சென்ற கானல் என்றாங்கு" (நற்.96)

என்ற கோக்குளமுற்றனாரின் மொழிவு, தலைவன் தலைவிக்குத் தழையாடை உடுப்பித்துச் சென்ற நிகழ்வினைக் காட்சிப்படுத்திச் செல்கின்றது.

## அணிகலன்கள்

தொடக்க காலத்தில் இயற்கைப் பொருள்களாகிய மரம், செடி கொடிகள் போன்றவற்றிலிருந்து பெறப்பட்ட இலைதழைகளையும், மலர்களையும் பறித்து அணிந்துள்ளமையினைப் பண்டைய இலக்கியங்கள் முன்நிறுத்திச் செல்கின்றன. "பழைய இலக்கியங்களில் அணிகள் பல பெயர்களால் வழங்கப்பட்டன. அணி, பூண், இழை, கலம், தொடி, குழை, வளை என்னும் சொற்கள் அணியைக் குறிப்பன. இவை எல்லாம் யாதாயினும் ஒரு காரணம் பற்றி வந்த பெயர்களாகும். முற்காலத்தில் ஆடை அணிதல் போல உரிய முறையில் அணியும் கழுத்தணியைக் குறித்து, பின் காலப்போக்கில் எல்லா நகைகளையும் பொதுவாகக் குறிக்கும் பெயராக அணி என்பது வந்திருக்கலாம். பூண் என்பது பூணப்படுவது ஆகும். ஓரங்களில் இறுக்கத்திற்காகப் பூண் போடுவதை அறியலாம். அதேபோலக் கைகளில் செறிவாக அணிந்த நகையைப் பொதுப் பெயராய் வழங்கி இருக்கலாம். இழை என்பது

இழைத்துச் செய்யப்படும் நகைகட்குப் பொதுப் பெயராக இழை வழங்கி இருக்கலாம்” என்பர் (Perumalsamy, 2007). ஈங்கு, நெய்தல் நிலத்தில் வாழ்ந்த பரதவ இன மக்களின் வாழ்க்கையில் பல்வேறான அணிகலன்கள்; வழக்கில் இருந்தமையைப் புலவர்கள் பதிவு செய்துள்ளனர். இந்த நிலைகளில் குழை, வளை, தொடி, சிலம்பு போன்ற உலோகங்களால் ஆன அணிகலன்களையும், மலர்களைக் கொண்டு தொடுக்கப்பட்ட மாலை, கோதை, தார் போன்றவற்றைக் கூந்தலிலும், மார்பிலும் அணிந்துள்ளனர். ஆண்களை விடப் பெண்களே அதிகமான அணிகலன்களை அணிந்துள்ளனர்.

## காதணி

நெய்தல் நில மகளிர் காதில் அணிகலன் அணிந்திருக்கின்றனர். இதனைக் குழையென்று அழைத்துள்ளனர்.

“கனங்குழைக்கு அமர்த்த சேயரி மழைக்கண்

அமர்ந்து இனிது நோக்கமொடு செகுத்தன” (நற்.16)

எனவரும் சிறைக்குடிஆந்தையாரின் பாடலடிகள், மேற்கண்ட கருத்தினை மெய்ப்படுத்தி நிற்கின்றன.

## வளையணி

வளை என்பது கடலில் கிடைக்கக் கூடிய சங்கினை எடுத்து அதிலிருந்து அறுத்துச் செய்யப்பட்ட ஓர் அணிகலன். இவ்வளையானது பெண்களின் கை மற்றும் தோளில் அணியப்பெற்றுள்ளது. கையில் அணியக்கூடிய வளையினை ‘முன்கை வளை’ என்றும், தோளில் அணியக்கூடிய வளையினை ‘தோள்வளை’ என்றும் ‘தொடி’ என்றும் அழைக்கப்பெற்றுள்ள மரபினைக் காணமுடிகிறது.

## முன்கை வளை

நெய்தல் நில மக்களிடம் வளை என்பது மிகவும் புழக்கத்தில் இருந்த அணிகலன் ஆகும். ஐங்குறுநூற்றில் உள்ள ‘வளை பத்து’ என்ற பகுதியில் உள்ள பத்துப் பாடல்களும், கடலில் இருந்து கிடைக்கப்பெற்ற சங்கினை அறுத்துச் செய்யப்பட்ட வளையினைக் குறிக்கும் வகையில் அமைத்துப் பாடப்பெற்றுள்ளன. இவ்வளை என்ற அணிகலன் பெரும்பான்மையும் தலைவியின் பிரிவுத் துன்பத்தை வெளிப்படுத்தும் போக்கில் ஒரு குறியீட்டுப் பொருளாகப் பயன்படுத்தப்பெற்றுள்ளன. இலங்குவளை (நற்.215, குறு.125, ஐங்.136), எல்வளை (நற்.239, 258, 363), ஆய்வளை (குறு. 316, கலி.125, ஐங்.140, 165), செறிவளை (கலி.123), நிறைவளை (கலி.132) என்று கைவளைகள் அதன் தன்மைக்கு ஏற்றவாறு அடைகொடுத்துக் குறிக்கப்பெற்றுள்ளன.

“ஆய்வளை ஞெகிழவு மயர்வுமெய் நிறுப்பவும்

நோய்மலி வருத்த மன்னை யறியின்

உளெனோ வாழி தோழி விளியா” (குறு.316)

“மருங்கூர்ப் பட்டினத்து அன்ன இவள்

நெருங்குஏர் எல்வளை ஓடுவ கண்டே” (நற்.258)

எனவரும் பாடலடிகள், தலைவியின் பிரிவுத் துன்பத்தை வெளிப்படுத்தும் நிலையில் அமைந்துள்ளன. மேலும் இவ்வளையானது தலைவி தலைவன் மீது கொண்ட அன்பையும், தலைவன் தன்னுடன் கூடி முயங்கப் பெறாமையால் ஏற்படுகின்ற உணர்வினையும், தலைவியின் களவு நிகழ்வினைத் தாய்க்கும், ஊரார்க்கும் அறிவிக்கும் முகமாகவும் எனப் பல நிலைகளில் ‘வளை’ புலவர்களால் புனையப்பெற்றுள்ளது.

## தோள்வளை

தோள்வளை யென்பது பெண்கள் கையின் மேல் பகுதியில் அணியும் அணிகலன் ஆகும். இதுவும் தலைவியின் உடல் மெலிவினை, பிரிவுத்துன்பத்தை வெளிப்படுத்தும் ஒரு பொருளாகவே காட்சிப்படுத்தப்பெற்றுள்ளது.

"மெல்லம் புலம்பன் பிரிந்தெனப்

புல்லென் றனவென் புரிவளைத் தோளே" (ஐங்.133)

என்ற அம்மூவனாரின் பாடலடிகள், தலைவன் பிரிந்தமையால் தலைவியின் உடல் மெலிவுற்று அதன் காரணமாகத் தோள்வளை நெகிழ்ந்த நிலையினைப் புலப்படுத்துகின்றன.

## சிலம்பு

பெண்கள் காலில் அணியும் ஒரு வகை அணிகலன் ஆகும். இவ்வணிகலன் களவுக் காலத்தில் தலைவி அணிந்திருந்தமையை நெய்தல் பாடல்கள் சுட்டுகின்றன. ஈங்கு மற்றொரு பார்வையில் "சிலம்புகழீஇ என்பது மனைவினைக்கண் நிகழும் ஒரு சடங்கு ஆகும். மணமகள் இளம் பருவத்தே தொடங்கி அணிந்துள்ள சிலம்பினைக் கழற்றுதளாகிய ஒரு சடங்கு - சிலம்புகழீஇயும், வதுவை மணமும் தலைவியின் பிறத்தையில் நிகழ்தலே சிறப்பாகும். ஒரே வழி உடன்போக்கு நிகழின் இச்சடங்குகளைத் தலைவன் மனைக்கண்ணும் நிகழ்தலும் உண்டு. சிலம்புகழீஇ சடங்கிற்கு மணமகள் உண்ணா நோன்பிருத்தல் மரபாகலின் இதனை, சிலம்புகழீஇ நோன்பு என்று கூறுவர் " (Manickanar, 2009) ஈங்கு நெய்தல் நிலத்தில் தலைவனும் தலைவியும் மாலை நேரத்தில் கடற்கரைப் பகுதியில் நண்டு பிடித்து விளையாடும் போது தலைவியின் காலில் அணிந்திருந்த சிலம்பு உடைந்து போனதால் அதனைச் சீர் செய்யும் பொருட்டுப் பொற்கொல்லன் பிணை கூட்டுதற்குரிய மண்ணினை உன் துறையிலிருந்து கொண்டு வந்து தருவாயாக எனத் தலைவனிடம் தோழி குறிப்பிடுவதிலிருந்து, வரைவு நிகழ்வதற்கு முன்பு சிலம்பு கழீஇதல் கூடாது என்பதும், அன்னை அறியின் இற்செறிப்புச் செய்வாள் என்பதையும்,

"பைந்தழை சிதையக் கோதை வாட

நன்னர் மாலை நெருனை நின்னொடு

சிலவிலங்கு எல்வளை ஞெகிழ

அலவன் ஆட்டுவோள் சிலம்புஞெமிர்ந் தெனவே" (நற்.363)

என்ற உலோச்சனாரின் பாடலடிகள், மெய்ப்படுத்தி நிற்கின்றன. இதன் வழி சிலம்பு என்ற அணிகலனை அணிவதும், அதனைக் கழற்றுவதுமான ஒரு பண்பாடு நெய்தல் நில மக்களிடம் காணப்படுவதை அறியமுடிகிறது. மேலும்,

"இன்மணிச் சிலம்பின் சில்மொழி ஐம்பால்

பின்னொடு கெழீஇய தடஅரவு அல்குல்" (கலி.125,16-17)

"வேறு ஒருபாற் றானதுகொல்லோ சீறடிச்

சிலம் பார்ப்ப இயலியாள் இவள்மன்னோ இனிமன்னும் (கலி.147,3-4)

என்ற பாடலடிகள், சிலம்பினுள் மணிகள் ஒலியெழுப்பிய தன்மையினையும், இளம் வயதில் சிலம்பு அணிந்த செயலினையும் தெளிவுறுத்திக் காட்டுகின்றன.

## பிற அணிகலன்கள்

நெய்தல் நிலத்தில் உள்ள மகளிர் இடுப்பிற்குக் கீழே ஒரு வகையான அணிகலனை அணிந்துள்ளனர். இதனை 'இழை அணி' என்றும் 'தழை அணி' என்றும் அழைத்துள்ளனர்.

இவ்வணிகலனைப் பெரும்பாலும் விழாக்காலத்தில் ஆடும் மகளிர், அதிகமாக அணிந்துள்ளமையினைப் பாடல்கள் சுட்டிக் காட்டுகின்றன. இது மிகவும் வேலைப்பாடு அமைந்த அணிகலனாகப் பதிவு செய்யப்பெற்றுள்ளது.

கண்அறி வுடைமை அல்லது நுண்வினை

இழைஅணி அல்குல் விழவாடு மகளிர்" (நற்.138)

"றழையணி யல்குன் மகளி ருள்ளும்

விழவுமேம் பட்டவென் னலனே பழவிறற்" (குறு.125)

என்பன போன்ற பாடலடிகள், விழாக் காலங்களில் மகளிர் அணிந்த நிகழ்வினைச் சுட்டி நிற்கின்றன.

"ஒள்இழை மாதர் மகளிரோடு அமைந்தவன்" (கலி.122,16)

"நறுநுத லரிவை பாசிழை விலையே" (அக.90)

"ஒள்ளிழை யுயர்மணல் வீழ்ந்தென" (ஐங்.122)

என்பன போன்ற பாடலடிகள், ஒள்இழை, பாசிழை எனப் பல்வேறு வேலைப்பாடுடன் கூடிய அணிகலன்களை மகளிர் அணிந்துள்ளமையினைக் காட்சிப்படுத்திச் செல்கின்றன. இவற்றுள் உள்ள வேறுபாடு நுணுகி ஆராயத்தக்கது.

## மலரணி

சங்ககாலம் முதல் இக்காலம் வரை மலரணிதல் என்பது பல்வேறான நிகழ்வுகளை வெளிக்காட்டும் நோக்கில் அமைந்திருக்கின்றன. நெய்தல் நிலப் பெண்டிர் நெய்தல் (நற்.96), குவளை (ஐங்.180), செருந்தி (அக.280), முண்டகம் (ஐங்.121), அடும்பு (குறு.401), தும்பை (ஐங்.127), ஞாழல் (ஐங்.147) என்பன போன்ற பல மலர்களைப் பறித்து அவற்றைத் தொடுத்துக் கண்ணியாகக் கூந்தலிலும், கழுத்திலும் சூடிக்கொண்டுள்ளனர். மேலும் இம்மகளிர் கூந்தலினைப் பின்னுகின்ற முறையினைப் புலவர்கள் பலவாறு பதிவு செய்துள்ளனர். ஐம்பால் (நற்.96), கூழை (நற்.145), நீர்வார் கூந்தல் (குறு.401, ஐங்.186), இரும்பல்கூந்தல் (ஐங்.191), இருங்கூந்தல் அல்லது இருண்ட கூந்தல் அல்லது இருளுறு கூந்தல் (கலி.131,147,140,122), கொழும்பல் கூந்தல் (ஐங்.196), பின்னிருங்கூந்தல் (ஐங்.173), குரற் கூந்தல்(கலி.144), பல ஒலிகூந்தல் (கலி.145) என்று அழைக்கப்பெற்றுள்ளமை குறிக்கத்தக்கன. இவற்றுள் ஐம்பால் என்பது "முடி, குழல், தொங்கல், பனிச்சை, சுருள். இவற்றுள் விவரமானது முடி - மயிரை யுச்சியின் முடித்தல், குழல் - சுருட்டி முடித்தல், தொங்கல் - மயிரை முடித்துத் தூங்க விடுதல், பனிச்சை - பின்னிவிடுதல், சுருள் - பின்னே சொருகல்" என்று தமிழ் விளக்க அகராதி விளக்கம் அளிக்கிறது (Kathiraiverpillai, 2009).

"அணிமலர் முண்டகத்து ஆய்பூங் கோதை

மணிமருள் ஐம்பால் வண்டுபடத் தைஇத்" (நற்.245)

என்ற அல்லங்கீரனாரின் பாடலடிகள், முள்ளியின் ஆய்ந்தெடுத்த பூமாலையை நீலமணி போலும் கூந்தலிடத்தே வண்டு மொய்க்கச் சூடி, தெளிந்த நீர் நிறைந்த கடலில் துறைவனுடன் விளையாண்ட நிகழ்வை உணர்த்துகின்றன. மேலும் களவுக்காலத்தில் தலைவன் தலைவியின் கூந்தலில் மலர் அணிவித்துச் செல்கிற நிகழ்வும் நடந்தேறியுள்ளது. இவற்றிலிருந்து நெய்தல் நில மகளிர் தன்னுடைய சிகையினைப் பல்வேறாக முடித்து அழகுபடுத்தி, அதில் மலர்களை அணிந்துள்ளனர் என்ற செய்தியினை அறியமுடிகிறது.

## ஆடவர் அணிகலன்

நெய்தல் நிலத்தில் உள்ள ஆடவர்கள், குறிப்பாக தலை மக்களாகக் கருதப்படுகிற தலைவர்கள்

சந்தனம் பூசிய மார்பில் ஆரம், நுண்பூண் போன்ற அணிகலன்களையும், பூமாலையாகிய தாரினையும் அணிந்திருந்தனர். இதனை,

“அணிகிளர் நெடுவரை அலைக்கும்நின் அகலத்து

மணிகிளர் ஆரம் தாரொடு துயல்வர” (கலி.135,17-18)

எனவரும் நெய்தற் கலியின் பாடலடிகள் மெய்ப்பித்துக் காட்டுகின்றன.

## சிறுவர் அணிகலன்

பெருஞ் செல்வர்களின் புதல்வர்கள் (சிறுவர்கள்) பொன்னாலான அணிகலன்களை அணிந்துள்ளனர். இதனை முதுகூற்றனார் என்ற புலவர்,

“பெறுமுது செல்வர் பொன்னுடைப் புதல்வர்

சிறுதோட் கோத்த செவ்வரிப் பறையின்” (நற்.58)

என்று பதிவு செய்துள்ளார். மேற்கண்ட நிகழ்வுகளைக் காணும்போது பரதவ இன மக்களின் பயன்பாட்டில் இருந்த ஆடை அணிகலன்களும், அவற்றை அணிந்த முறைமைகளும், அதன்வழிப் புலப்படுகின்ற பண்பாட்டுச் செய்திகளையும் அறியமுடிகின்றன. மேலும் பரதவ மக்களின் பயன்பாட்டில் இருந்த ஆடை அணிகலன்களைக் கொண்டு நோக்கும்போது இவர்கள் வாழ்ந்த காலகட்டங்களை அறிய முடிகிறது. தழையாடை அணிந்தமை தொடக்க காலகட்டத்தையும், சிலம்பு அணிந்தமை உலோக காலகட்டத்தையும் எடுத்துக்காட்டுவதாக உள்ளன.

## ஊர்திகள்

சங்க காலத்தில் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செல்வதற்கு யானை, குதிரை, எருது, கோவேறுகழுதை முதலிய விலங்கினங்களைப் பயன்படுத்தியுள்ளனர். பின்னர் தேர், வண்டி போன்றவற்றில் விலங்கினங்களைப் பூட்டித் தங்களது பயணத்தை விரைவு படுத்தியுள்ளனர். நெய்தல் நிலத் தலைவர்கள் குதிரைகள் பூட்டிய தேர்களையும், உமணர்கள் எருதுகள் பூட்டிய வண்டிகளையும் பயன்படுத்தி நெய்தல் நிலத்திற்குள்ளும், நெய்தல் நிலத்தில் இருந்து மற்ற நிலங்களுக்கும் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

## குதிரைகள் பூட்டிய தேர்

நெய்தல் நிலத்தின் தலைமக்களாகக் கருதப்படும் கொண்கன், சேர்ப்பன், துறைவன், புலம்பன் என்பவர்கள் குதிரைகள் பூட்டிய நெடுந்தேரில் வந்து கடற்கரைச் சோலைகளில் பரதவ இனப் பெண்ணான தலைவியுடன் களவு மேற்கொண்டு சென்றதனைப் பாடல்கள் வழி அறியமுடிகிறது.

“கவர்பரி நெடுந்தேர் மணியும் இசைக்கும்

பெயர்பட இயங்கிய இளையரும் ஒலிப்பர்

...................................................

வருமே தோழி வார்மணற் சேர்ப்பன்” (நற்.307)

“கொண்க னூர்ந்த கொடுஞ்சி நெடுந்தேர்

தெண்கட லடைகரைத் தெளிமணி யொலிப்ப” (குறு.212)

“பண்அமை நெடுந்தேர்ப் பாணியின் ஒலிக்கும் தண்ணம் துறைவன் தூதொடும் வந்த” (நற்.167)

“செல்லு மன்னோ மெல்லம் புலம்பன்

செல்வோன் பெயர்புறத் திரங்கி முன்னின்று

தகைஇய சென்றவென் னிறையி னெஞ்சம்" (அக.330)

எனவரும் பாடலடிகள், அனைத்தும் நெய்தல் நிலத்தலைவன் தேரில் சென்று வருகின்ற நிகழ்வினை வெளிக்காட்டுவதாக உள்ளன.

## எருதுகள் பூட்டிய வண்டி

நெய்தல் நிலத்தில் எருதுகள் பூட்டிய வண்டியினைப் பயன்படுத்தியவர்கள் உமணர்களே ஆவர். இவர்களின் முக்கியமான தொழில் நெய்தல் நிலத்தின் கழிமுகப் பகுதிகளில் விளைவிக்கப்பட்ட உப்பினை, எருதுகள் பூட்டிய வண்டிகளில் ஏற்றிச் சென்று மற்ற நிலத்தில் உள்ள ஊர்களில் விற்று வருவதேயாகும். இவர்கள் ஓரிடத்தில் இருந்து மற்றோர் இடத்திற்குத் தொழில் செய்யும் பொருட்டுச் சென்றுவர மிகவும் பயன்பாட்டுத் தன்மை உடையதாக இவ்வண்டி இருந்திருக்கிறது.

"................................ உமணர்

வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றிக்

கணநிரை கிளர்க்கும் நெடுநெறிச் சகடம்" (நற்.4)

என்ற அம்மூவனாரின் பாடலடிகள், உமணர்கள் வண்டியில் உப்பினை ஏற்றிச் சென்று விலைகூறி விற்ற நிகழ்வினைப் புலப்படுத்துகின்றன.

## கடல் ஊர்திகள்

நிலப்பரப்பில் தேரினையும், வண்டினையும் பயன்படுத்தியதைப் போன்று, கடலின் வழியாக ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு வாணிபத்தின் பொருட்டும், மீன்வேட்டம் செய்யும் பொருட்டும் பயணம் மேற்கொள்ள அம்பி, புணை, திமில், நாவாய், வங்கம், கலம், தோணி போன்ற மரக்கலன்களைப் பயன்படுத்தியுள்ளனர். இவை ஒருவகையில் இந்நில மக்களின் பண்பாட்டினையும், பொருளாதார வகையிலான பாகுபாட்டையும் அறிவதற்குத் துணையாக அமைகின்றன.

## அம்பி

அம்பி என்ற சொல்லுக்கு நீர் என்ற பொருளும் உண்டு. அம்பு என்ற சொல்லுக்கு மூங்கில் என்ற பொருளும் உண்டு. இது மூங்கில் மரங்களால் உருவாக்கப்பட்ட மரக்கலமாகக் கருத வாய்ப்பு உண்டு. அம்பி என்பது எவ்விதப் பாய்மரமும் இன்றிக் காணப்படுவதால், இது கடற்கரையிலிருந்து வெகுதூரம் சென்றிருக்க இயலாது. அம்பி மிகச் சிறியதாக இருப்பினும் இதில் சென்ற பரதவர்கள் அதிகமான மீனைப் பிடித்து வந்துள்ளனர்.

"வடிக்கதிர் திரித்த வல்ஞாண் பெருவலை

இடிக்குரல் புணரிப் பௌவத்து இடுமார்

நிறையப் பெய்த அம்பி காழோர்

சிறை அருங் களிற்றின் பரதவர் ஒய்யும்" (நற்.74)

என்ற உலோச்சனாரின் மொழிவு, மேற்கண்ட கருத்தினை மெய்ப்பித்து நிற்கின்றது.

## புணை

புணைக்கட்டை, கட்டுமரம் போன்றவை மரங்களைச் சேர்த்துப் பிணைத்து இது உருவாக்கப்பட்டதால், பிணை - புணை என்று குறிப்பிட்டிருக்க வேண்டும். இதில் பரதவர்கள் சென்று

மீன் பிடித்து வந்ததாகச் செய்திகள் இல்லை. இது உயிர் காக்க உதவும் மரக்கலமாகப் பயன்படுத்தப்பெற்றுள்ளது.

"கரைகாணாப் பௌவத்துக் கலம்சிதைந்து ஆழ்பவன்

திரைதரப் புணைபெற்றுத் தீதின்றி உய்ந்தாங்கு" (கலி.134,24-25)

"பிரிந்தவர்க்கு நோயாகிப் புணர்ந்தவர்க்குப் புணையாகி" (கலி.148.18)

என்ற பாடலடிகள், புணையின் பயன்பாட்டினை இயம்பும் நிலையில் அமைந்துள்ளன.

## திமில்

இம்மரக்கலம் கடலில் மீன்வேட்டம் செய்யவும், முத்துக்குளிக்கவும் உருவாக்கப்பட்ட திமில் ஆகும். பெரும்பாலான பரதவர்கள் இதனைப் பயன்படுத்தியே கடல்மேற் சென்று மீன்வேட்டம் செய்துள்ளனர். சங்ககாலப் பரதவர்களிடம் இது அதிகமான பயன்பாட்டுத் தன்மை உடையதாயிருந்திருக்கின்றது. பகல் மற்றும் இரவு நேரங்களிலும் இத்திமிலினைப் பயன்படுத்தி மீன்பிடிக்கச் சென்றுள்ளனர். இரவில் செல்லும்போது இத்திமிலில் விளக்குப் பயன்படுத்தப்பெற்றுள்ளது. இத்தருணங்களில் பரதவர்கள் தங்களுடைய இளம் தலைமுறையினரை அழைத்துச் சென்று அவர்களுக்கு மீன் நடமாடும் இடம், கடல் அலையின் தன்மை போன்ற பல நிகழ்வுகளைக் கற்றுக் கொடுத்துள்ளனர்.

"றிரைச்சுர முழந்த திண்டிமிழ் விளக்கிற்

பன்மீன் கூட்டம் என்னையர்க் காட்டிய

வெந்தையுஞ் செல்லுமார் இரவே அந்தில்" (அக.240)

என்ற எழூஉப்பன்றி நாகன்குமரனாரின் பாடலடிகள், தலைவியின் தமையன்மார்களுக்கு இரவில் பன்மீன் கூட்டம் காட்டிய நிகழ்வைக் காட்சிப்படுத்துகின்றது.

மேலும், இத்திமிலினைப் பயன்படுத்தியோரைத் 'திமிலோன்' என்றும் அழைத்துள்ளனர். இத்திமிலின் வடிவம், பண்பு ஆகியனவற்றைப் பொறுத்து நெடுந்திமில் (அக.60), கொடுந்திமில் (குறு.304), வருதிமில் (அக.190), நிரைதிமில் (கலி.149), திண்திமில் (நற்.388) என்று பல பெயர்களால் அழைக்கப்பெற்றுள்ள மரபினைச் சங்கப் புலவர்கள் பதிவு செய்துள்ளனர். இத்திமிலினைப் பயன்படுத்தி மீன்வேட்டம் மட்டுமல்லாது, கடலுள் மூழ்கி முத்து, சங்கு போன்ற மதிப்புமிக்க பொருட்களை எடுப்பதற்கும் பயன்படுத்தியுள்ளனர். இப்பணிகள் பரதவர்களின் திண்மையினை வெளிப்படுத்தும் பாங்கில் உள்ளமையை அறிய ஏதுவாகின்றன. கடலின் ஆழத்தில் மூழ்கியிருக்கும் போது கடலுக்குள் வாழும் சுறா போன்ற மனிதனுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய உயிரினங்கள் தாக்கக்கூடும். அதனையெல்லாம் மீறித் தங்கள் உயிரினைப் பணயம் வைத்து இத்தொழிலினைச் செய்வது சாதாரண செயல் அன்று.

"இலங்கிரும் பரப்பி னெறிசுறா நீக்கி

வலம்புரி மூழ்கிய வான்றிமிற் பரதவர்" (அக.350)

எனவரும் சேந்தங்கண்ணனாரின் பாடலடிகள், பரதவர்கள் திமிலில் சென்று கடலில் மூழ்கி முத்து எடுத்த நிகழ்வினை வெளிக்காட்டி நிற்கின்றன.

## நாவாய்

மரக்கலன்களில் மிகப் பெரியது நாவாய் ஆகும். இது காற்றின் உதவியோடு கடலில் செலுத்தக்கூடிய ஒரு கலம். இதனைக் கொண்டு வெகுதூரம் பயணம் மேற்கொள்ள இயலும். காற்று வீசும் திசைக்கு ஏற்பப் பயணவழி அமையும். நாவாய் என்பதற்கு "கடலகத்து மோதும் காற்றாலும்,

அலைகளாலும் கட்டும் கோப்பும் கெடாவகையில் இறுகப் பிணிக்கப்பட்ட அழகிய தொழிற்பாடு அமைந்த மரக்கலம்” என்பார் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை (Duraisami Pillai,, 2008). இது நீரைப் பிளந்து கொண்டு விரைந்து செல்லும் தன்மை வாய்ந்தது. இக்கலத்தினைப் பெரும்பாலும் நாடுகளுக்கிடையே கடல்வழியாக அயல்நாட்டு வணிகம் செய்யப் பயன்படுத்தியுள்ளனர்.

“வேறுபல் நாட்டிற் கால்தர வந்த

பலவினை நாவாய் தோன்றும் பெருந்துறைக்

கலிமடைக் கள்ளின் சாடி அன்னஎம்” (நற்.295)

என்ற ஔவையாரின் மொழிவு, வேறு நாட்டிலிருந்த பண்டங்கள் ஏற்றி வந்த செயலினையும், அது காற்றின் தன்மையினால் இயக்கப்பட்ட நிலையினையும், அயல்நாட்டிலிருந்து தயாரிக்கப்பட்ட சாடியினைக் கொண்டு வந்த நிகழ்வினையும் உணர்த்தும் நிலையில் அமைந்துள்ளன. மேலும்,

“நெடுங்கொடி நுடங்கு நாவாய் தோன்றுவ

காணா மோவெனக் காலிற் சிதையா” (அக.110)

என்ற பசலையாரின் பாடலடிகளும், நாவாயில் நெடுங்கொடி கட்டப்பட்டிருந்த செய்தியினைப் புலப்படுத்துவதிலிருந்து, இது பல நாடுகளுக்குச் சென்று வந்த நிகழ்வினைத் தெளிவுபடுத்துவதாக உள்ளன.

## வங்கம்

இதுவும் நாவாயைப் போன்று பெரியது. வெளி நாடுகளுக்குப் பெருமளவில் வணிகப் பொருட்களை ஏற்றிச் செல்ல வங்கம் பயன்பெற்றுள்ளது. “வங்குதல் என்பதற்கு வளைதல் என்ற பொருளும் உண்டு. வங்கம் என்பது நீர்ப்பரப்பில், மேடு பள்ளங்களை உருவாக்கிய அலைகள் குறித்துச் சொல்லப்பட்டது என்றும், இதனை நீர் எனவும் அலை எனவும் கொள்ளலாம் என்றும் சிலர் கருதுகின்றனர். வங்கம் பெருமளவில் சென்று வந்த கடல் வங்கக்கடல் எனப்பட்டது. வளைவான அமைப்பினைக் கொண்டிருந்தது பற்றியும் வங்கம் என அழைக்கப்பட்டதாகக் கூறுவர்.” (Victor, 2007).

“பச்சிறாக் கவர்ந்த பசுங்கட் காக்கை

தூங்கல் வங்கத்துக் கூம்பில் சேக்கும்” (நற்.258)

என்ற நக்கீரனாரின் பாடலடிகள், நெய்தல் நிலத்தில் இறால் மீனைக் கவர்ந்த காக்கையானது வங்கத்தின் கூம்பில் நின்றமையைச் சுட்டுவதிலிருந்து இதுவும் நெய்தல் நில மக்களிடையே பயன்பாட்டில் இருந்தமையை புலப்படுத்துகிறது.

## கலம்

கலம் என்பது கப்பலையும் குறிக்கும். மரத்தால் செய்யப்பட்ட கலம் மரக்கலம் ஆகும். இது கடலின் மிகவும் ஆழமான பகுதிகளுக்கு எல்லாம் பயணம்; செய்யப் பயன்படுத்தப்பெற்றுள்ளது.

“கரைகாணாப் பௌவத்துக் கலம்சிதைந்து ஆழ்பவன்

திரைதரப் புணைபெற்றுத் தீதின்றி உய்ந்தாங்கு” (கலி.134,24-25)

“கோடுபுலங் கொட்பக் கடலெழுந்து முழங்கப்

பாடிமிழ் பனித்துறை யோடுகல முகைக்கும்” (ஐங்.192)

என்பன போன்ற பாடலடிகள், கலம் என்ற ஒன்று இந்நில மக்களின் பயன்பாட்டில் இருந்தமையைத் தெளிவுறுத்திக் காட்டுகின்றன.

## தோணி

"துள் - தோள் - தோடு - தோண்டி - தோணி என்றவாறு நீண்டது. தோண்டி- தொண்டி என்றும் தொண்டு என்றும் சொல்லப்பட்டது. தோணி, தொண்டு ஆகிய சொற்களும் மரக்கலம் பற்றியவைகளே. தொண்டுகள் வந்துபோன இடம் தொண்டி (துறைமுகம்) எனப்பட்டது என்பர் (விக்டர், 2007).. பரதவர்கள் மீன்களைப் பிடித்து அதனைத் துண்டித்து அவ்விறைச்சியைத் தோணியில் ஏற்றிக் கொண்டு வந்துள்ளனர். இதனை,

"வாள்வாய்ச் சுறவொடு வயமீன் கெண்டி

நிணம்பெய் தோணியர் இகுமணல் இழிதரும்" (நற்.111)

என்ற தோழி கூற்றுப் பாடலடிகள், இயம்பி நிற்கின்றன. இவ்வாறாக நெய்தல் நில மக்கள் பல கடல் ஊர்திகளைத் தொழிலுக்காகவும், வாணிப நோக்கத்திற்காகவும் பயன்படுத்தியுள்ள தன்மையினை இதன்வழி அறியமுடிகிறது. இது ஒரு வகையில் இம்மக்களின் தொழில் திறனை வெளிக்காட்டும் வகையில் உள்ளமை குறிக்கத்தக்கது.

## தொழில்நுட்பமும் தொழிற்கருவிகளும்

ஒவ்வொரு நிலத்தார்க்கும் ஏற்ற வகையில் இயற்கை அமைப்பிற்கு ஏற்பத் தொழில் முறைகளும், தொழில்நுட்பங்களும், தொழிற்கருவிகளும் அமைந்திருக்கின்றன. "தொழில் நுட்பம் என்பது பண்பாட்டின் பகுதியாகும். அதுவே குறிப்பிட்ட மக்களை அவர்களுடைய சுற்றுச்சூழலுக்கு ஏற்பத் தங்களைத் தகவமைத்துக் கொள்ளும் வாய்ப்பைப் பெற்றுள்ளது. வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் மனிதஇனம் மட்டுமே தொழில்நுட்ப அடிப்படையில் விடைகாணும் முறைகளைக் கண்டுபிடித்து, அதனைமேலும் வளர்த்தெடுத்து வந்துள்ளது." நெய்தல் நில மக்களாகிய பரதவர்கள் பல்வேறான தொழில்களைச் செய்து வாழ்க்கை நடத்தியுள்ளனர் (Dhananjayan, 2010). மீன்பிடித்தல், உப்பு விளைவித்தல், முத்து எடுத்தல், சங்கு அறுத்தல், வாணிபம் மேற்கொள்ளல் என அவை நீண்டு கொண்டே செல்கின்றன. இவற்றுள் அவர்களின் தொழில்நுட்பம் என்பது கலன் அமைத்து மீன்பிடிக் கருவிகளைக் கொண்டு மீன்வேட்டம் செய்துவருகின்ற முறைமைகளில் இருந்தே அறிய முடியும்.

கடற்பயணம் என்பது சாதாரண செயலன்று. பரதவர்கள் கலன்களைக் கடலினுள் செலுத்துவதற்கு முன்பு கையாண்ட தொழில்நுட்பங்களும், கடலினுள் சென்ற பின்பு மீன்வேட்டம் செய்ய மேற்கொண்ட நுட்பங்களும் அவர்களின் நுண்ணறிவுத் திறனை வெளிக்காட்டும் நிலையில் அமைந்துள்ளன. மீன்வேட்டம் செல்வதற்கு முன்பு கடலின் தன்மையினை அதாவது காற்றின் திசை, அலையின் வேகம் ஆகியனவற்றைத் தங்களது அனுபவ அறிவினால் தெளிந்து அதற்கேற்ப நடந்து கொண்டுள்ளனர்.

"கானலஞ் சிறுகுடிக் கடன்மேம் பரதவர்

நீனிறப் புன்;னைக் கொழுநிழல் அசைஇத்

தண்பெரும் பரப்பின் ஒண்பதம் நோக்கி" (நற்.4)

என்ற அம்மூவனாரின் மொழிவு, கடலின் தன்மையினை அறிந்து மீன்வேட்டம் செல்லக் கூடிய நிலையினையும்,

" கடல்பா டவிந்து தோணி நீங்கி

நெடுநீர் இருங்கழிக் கடுமீன் கலிப்பினும்" (அக.50)

என்ற கருவூர் பூதஞ்சாத்தனாரின் மொழிவு, கரிய கழியிடத்துக் கடுமீன் செருக்கித் திரிகின்ற நிலையினைச் சுட்டுவதன் வழி எந்தெந்த நேரத்தில் என்னென்ன மீன்கள் உலாவும் என்பதைப்

பரதவர்கள் அறிந்து வைத்திருக்கின்றமையை வெளிப்படுத்தியுள்ளது. இந்நிலையில் அவர்களின் அனுபவ அறிவினையும், தொழில்திறனையும் நன்கு அறிந்து கொள்ள இயலுகிறது.

## மீன்பிடிக் கருவிகள்

பரதவர்கள் மீன்பிடிக்க வேண்டிய கலன்கள், வலைக்கருவிகள் ஆகியன தொழில் நுட்பக் கருவிகளுள் அடங்கும். இவற்றுள் கலன்களைப் பற்றிய கருத்துக்கள் கடல் ஊர்திகள் என்ற தலைப்பின் கீழ் விரிவாக ஆராயப்பெற்றுள்ளமையினால் ஈங்கு வலை, தூண்டில், எறியுளி ஆகியன பற்றி எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

## வலைக் கருவிகள்

மீன்வேட்டைக்குச் செல்வதற்குத் திமில், அம்பி போன்ற மரக்கலன்களைப் பயன்படுத்திய பரதவர்கள், கடலினுள் சென்று பலவகையான வலைகளைப் பயன்படுத்தி மீன்களைப் பிடித்து வந்துள்ளனர். இவ்வகையில் மீன்பிடிக்கும் காலம், மீனின் வலிமை, வடிவம் ஆகிய பண்புகளின் அடிப்படையில் வெவ்வேறானவையாகக் கையாளப்பெற்றுள்ளன.

## குறுங்கண் அவ்வலை

குறுங்கண் அவ்வலையென்பது சிறிய கண்களை உடையதாகப் பின்னப்பட்டிருக்கும் அழகிய தன்மை கொண்டது. இவ்வலையில் நீண்ட கயிறு கட்டப்பட்டிருக்கும். இதனால் திரளான மீன் இனங்களைப் பிடித்துவர இயலும். இதனை,

“நெடுங்கயிறு வலந்த குறுங்கண் அவ்வலைக்

கடல்பா டழிய வினமீன் முகந்து” (அக.30)

என்று முடங்கிக் கடந்த நெடுஞ்சேரலாதனின் பாடலடிகள் காட்சிப்படுத்தி நிற்கின்றன. இந்த வலையினைப் பயன்படுத்தி அதிகமான மீன்களைப் பிடித்து வந்தமையால் அச்செயலினைப் பாராட்டிக் கொழுவிய கண்ணுடைய அயிலை மீனை துறைவன் பலருக்கும் பகுத்துக்கொடுத்த செயலினையும் (அக.70) நெய்தல் பாடலில் பதிவு செய்யப்பெற்றுள்ளது.

## நுண்ஞாண் அவ்வலை

நுண்ணிய கயிற்றினால் கட்டப்பட்ட அழகிய வலை. இதனுடைய அமைப்பு சிறியதாகக் காணப்படும் போலும். இவ்வலையினைக் கொண்டே பரதவ இனத்தாரில் காணப்படும் இளஞ்சிறார்கள் மீன்பிடிக்கச் சென்றுள்ளனர். இவை இளஞ்சிறார்களுக்கு மீன் பிடிக்கக் கற்று கொடுப்பதற்காகப் பின்னப்பட்டவையாக இருக்கலாம். இவ்வலையினைக் கொண்டு நெய்தல் நிலச் சிறுவர்கள் கொக்கினைப் பிடித்துள்ளனர்.

“கொழுமீன் வல்சிப் புன்றலைச் சிறாஅர்

நுண்ஞாண் அவ்வலைச் சேவல் பட்டௌன” (அக.290)

எனவரும் நக்கீரனாரின் மொழிவு, மேற்கண்ட கருத்தினை உறுதிப்படுத்தி நிற்கின்றன.

## வரிவலை

சிறார்கள் பயன்படுத்திய மற்றொரு வலை வரிவலை ஆகும். இந்த வலையினைக் கொண்டு மீன்வேட்டம் சென்ற இளஞ்சிறார்கள் இறால் மீனுடன் பலவாய்த் தொகுக்கப்பட்ட வேறுவகை

மீன்களையும், வாள்வாய்ச் சுறா, வயமீன் போன்ற பெரிய மீன்களையும் பிடித்து வந்துள்ளனர். இந்நிகழ்வினை விளக்கும் முகமாக,

“அத்த இருப்பைப் பூவின் அன்ன

துய்த்தலை இறவொடு தொகைமீன் பெறீஇயர்

வரிவலைப் பரதவர் கருவினைச் சிறாஅர்” (நற்.111)

என்ற தோழி கூற்றுப் பாடலடிகள் அமைந்துள்ளன.

## அரில் வலை

அரில் வலை என்பது அடிக்கடிச் சிக்குண்டு விடும் தன்மை வாய்ந்தது. கடலின் தன்மையை அறிந்து மீன் வேட்டம் செல்லக் காத்திருக்கும் பரதவர்கள் அந்நேரத்தில் சிக்குண்ட அரில்வலைகளைச் சரிசெய்துள்ளனர். இதனை,

“தண்பெரும் பரப்பின் ஒண்பதம் நோக்கி

அங்கண் அரில்வலை உணக்கும் துறைவனொடு” (நற்.4)

என்ற அம்மூவனாரின் பாடலடிகள் மெய்ப்பித்துக் காட்டுகின்றன.

## முடிவலை

அதிகமான முடிச்சுக்களால் பின்னப்பட்ட வலை முடிவலை எனப்படும். இவ்வலையினைக் கொண்டு வளைந்த முதுகினையுடைய இறால் மீனைப் பிடித்துள்ளனர். இதனை நெய்தல் தத்தனார் என்ற புலவர்,

“முடிவலை முகந்த முடங்கிறாப் பாவைப்

படுபுள் ஓப்பலின் பகல்மாய்ந் தன்றே” (நற்.49)

என்று பதிவு செய்துள்ளமையின் வழி முடிவலையின் பயன்பாட்டினை அறிந்து கொள்ள முடிகிறது.

## நாள்வலை

நாள்வலை என்பது அதிகாலையில் கடலுக்குள் சென்று மீன்பிடிக்கப் பயன்பட்ட வலையினைக் குறிக்கும். இவ்வலையினைப் பயன்படுத்திப் பரதவர்கள் அதிகமான மீன்களைப் பிடித்து வந்து கடற்கரை மணலில் காயப்போட்டுள்ள செய்தியினை,

“நாள்வலை முகந்த கோள்வல் பரதவர்

நுணங்குமண லாங்கண் உணங்கப் பெய்மார்” (அக.300)

என்பதன் வாயிலாக உணரமுடிகிறது.

## செங்கோல் அவ்வலை

செங்கோல் அவ்வலையானது செவ்விய தன்மை கொண்ட தடியால் அல்லது கம்பால் சேர்த்துப் பிணிக்கப்பட்டிருக்கும். இது இறால் மீன்களைப் பிடிக்கப் பயன்படும் ஒரு வகையான வலையாகும். கடலுக்குள் மட்டுமின்றிக் கழிமுகப் பகுதிகளில் உலாவும் இறால் மீன்களையும் இவ்வலையினைக் கொண்டு வாரி வந்துள்ளமையை,

"இருங்கழி முகந்த செங்கோல் அவ்வலை

முடங்குபுற இறவோ டினமீன் செறிக்கு" (அக.220)

என்று மதுரை மருதனிளநாகனார் இயம்பியுள்ளமை குறிக்கத்தக்கது.

## கொடுமுடி அவ்வலை

செவ்விய கோலோடு இணைக்கப்பட்ட வளைவாக உள்ள முடிகளையுடைய அழகிய மீன்வலை. இவ்வலை மிகவும் வலிமை வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இதனைப் பயன்படுத்தி மிக்க வன்மையும், எதிர்பட்ட பொருளை வீழ்த்திக் கொல்லும் தன்மையும் கொண்ட சுறாமீனைப் பிடித்துள்ளனர். சுறாமீன் சில நேரங்களில் இவ்வலையினைக் கிழித்துவிட்டுச் சென்ற நிகழ்வும் நடந்தேறியுள்ளது. இதனை மதுரைச் சுள்ளம் போதனார் என்ற புலவர்

"கொடுமுடி அவ்வலை பரியப் போகிய

கோட்சுறா குறித்த முன்பொடு" (நற்.215)

என்ற பாடலடிகள் வழி வெளிப்படுத்தியுள்ளார்.

## பெருவலை

பெருவலைகளில் பல வகைகள் உள்ளன. மீன்பிடிக்கச் செல்லும் பரதவர்கள் பெருவலை, வன்ஞாண் பெருவலை என்ற இரு வலைகளைப் பயன்படுத்தியுள்ளனர். இவ்வலையினைப் பயன்படுத்தி அதிகமான மீன்களைப் பிடித்த பரதவர்கள், அம்மீனை மணற் பரப்பிற் காயப்போட்டுள்ளனர்.

"உரவுக்கடல் உழந்த பெருவலைப் பரதவர்

மிகுமீன் உணக்கிய புதுமணல் ஆங்கண்" (நற்.63)

என்ற உலேச்சனாரின் பதிவு மேற்கண்ட கருத்தினை மெய்ப்பித்து நிற்கின்றன.

## வன்ஞாண் பெருவலை

திருத்தமாகச் செய்யப்பட்ட கதிரிட்டு முறுக்கிய வலிமை வாய்ந்த நூல்கயிற்றால் பின்னப்பட்ட பெரிய வலை இதுவேயாகும். இவ்வலையினைக் கொண்டு மிகப்பெரிய அலைகள் எழக்கூடிய பகுதிகளிலும் வீசி மீன்பிடிக்க இயலும். இதுவே மிகப் பெரியதாகக் கருதப்படுகிறது.

"வடிக்கதிர் திரித்த வல்ஞாண் பெருவலை

இடிக்குரல் புணரியப் பௌவத்து இடுமார்

நிறையப் பெய்த அம்பி காழோர்" (நற்.74)

எனவரும் உலோச்சனாரின் கூற்று, பெருவலையினைக் கொண்டு பிடித்த மீன்களைப் பரதவர்கள் காயப்போட்ட செய்தியினை வெளிச்சமிட்டுக் காட்டுகின்றது.

## கொடுமுடி நெடுவலை

கடினமான முடிச்சுகளால் பின்னப்பட்ட நீண்ட வடிவமைப்பினைக் கொண்ட வலை. இவ்வலையும் சுறாவினைப் பிடிக்கப் பயன்படுத்தப்பெற்றுள்ளது. சுறா மீனைப் பிடிக்கும் போது கிழிக்கப்பட்ட இவ்வலையினைப் பரதவர்கள் தன்னுடைய வீட்டின் முற்றத்தில் உள்ள தாழை மரத்தில் தொங்கவிட்டிருப்பர். கடினமான காற்று அதிக விசையுடன் அடிக்கும் போது இவ்வலையினைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதில்லை.

"கூருளிக் கடுவிசை மாட்டலிற் பாய்ந்துடன்
கோட்சுறாக் கிழித்த கொடுமுடி நெடுவலை
தண்கட லசைவளி யெறிதொறும் வினைவிட்டு" (அக.340)

என்ற நக்கீரனாரின் பாடலடிகள், சுறாமீன் கொடுமுடி நெடுவலையினைக் கிழித்த நிகழ்வையும், அதிகமான காற்று மற்றும் அலைகள் வீசும்போது, இவ்வலை பயன்படுத்தப்படாமல் தாழையில் கிடப்பதையும் காட்சிப்படுத்திச் செல்கின்றன.

## எறிஉளி

படகில் மீன்வேட்டம் செல்லும் பரதவர்கள் கையில் எறிஉளி என்னும் கருவியினை வைத்திருப்பர். இது ஒரு வகையில் பாதுகாப்புக் கருவியாகும். படகில் இருந்தபடியே மீனினை எறிந்து கொல்லக்கூடிய தன்மையினால் இது எறிஉளி என அழைக்கப்பெற்றுள்ளது. இதன் அமைப்பு என்பது ஓர் ஆளின், முகம் வரை வளர்ந்த மூங்கில் கம்பினை எடுத்து அதன் ஒரு புறத்தில் 'உளி' என்னும் கூர்மையான ஆயுதத்தாலும், மறுபுறம் வலிய புரிகள் பலவற்றால் இயன்ற கயிற்றினையும் கோத்துக் கட்டப்பட்டிருக்கும். கணக்காயன் தத்தன் என்ற புலவர் இக்கருவியின் பயன்பாட்டினை,

"கொல்வினைப் பொலிந்த கூர்வா யெறியுளி
முகம்பட மடுத்த முளிவெதிர் நோன்காழ்
தாங்கரு நீர்ச்சுரத் தெறிந்து வாங்குவிசைக்
கொடுந்திமிற் பரதவர் கோட்டுமீ னெறிய" (குறு.304)

எனப் புனைந்திருப்பது குறிக்கத்தக்கது. மேலும், இரவில் மீன்வேட்டம் செல்லும் பரதவர்கள் எறிஉளியினைக் கொண்டு சென்றமையினைப் (நற்.388) பெருங்கண்ணனார் என்ற புலவர் பதிவு செய்துள்ளார். இதுமட்டுமல்லாது இக்கருவியினைப் பயன்படுத்துகிற முறைமை யென்பது கயிற்றை மரக்கலத்தின் ஒரு பகுதியில் கட்டி வைத்துவிட்டு, மூங்கில் கம்பால் ஆன அதனை உளி என்ற கூர்மையான பகுதி பெரிய மீனின் மீது படுமாறு எறிவர். இதனால் அவ்வுளி மீனினைத் தாக்கி விட்டு மீண்டும் கலத்திற்கே வந்துவிடும். காயம்பட்ட மீன் சிறிது நேரத்தில் குருதிகொட்டி இறந்து படகின் அருகில் மிதந்துவிடும். பின்பு அதனைக் கைப்பற்றிக் கொணர்வர். உலோச்சனார் என்ற புலவர் எறியுளியினைப் பரதவர்கள் பயன்படுத்தி மீனைக்கொன்று பிடித்த செயலினை,

"குறியிறைக் குரம்பைக் கொலைவெம் பரதவர்
எறியுளி பொருத ஏமுறு பெருமீன்
புண்ணுமிழ் குருதி புலவுக்கடன் மறுப்பட
விசும்பணி வில்லிற் போகிப் பசும்பிசிர்த்
திரைபயில் அழுவம் உழக்கி உரனழிந்து" (அக.210)

எனப் பதிவு செய்திருப்பது குறிக்கத்தக்கது.

## தூண்டில்

வலைகள், எறியுளி ஆகியவற்றால் மட்டுமின்றித் தூண்டில் வைத்தும் மீன்பிடித்துள்ளனர். இதனை வாங்குவிசைத் தூண்டில் என்று அழைத்துள்ளனர்.

"கடுஞ்சுறா எறிந்த கொடுந்திமிற் பரதவர்
வாங்குவிசைத் தூண்டில் ஊங்குஊங்கு ஆகி" (நற்.199)

என்ற பேரிசாத்தனாரின் பாடலடிகள், மேற்கண்ட கருத்தினை மெய்ப்பித்து நிற்கின்றன. இவ்வாறாகப் பரதவர்களின் தொழிலினையும், தொழில் கருவிகளையும் வைத்து நோக்கும் போது அம்பி, தோணி போன்ற சிறு மரக்கலன்களில் மீன் பிடிக்கச் சென்றமை முதல் நாவாய் போன்ற பெரிய மரக்கலன்களில் வாணிபம் மேற்கொள்ளச் சென்றமை வரையிலான பதிவுகள், தொடக்க காலகட்டத்தினையும், பின்பு படிப்படியாக வளர்ச்சி பெற்ற நிலைகளையும் வெளிக்காட்டுவதாக உள்ளமை தெளிவு.

## முடிவுரை

நெய்தல் நில மக்களின் புழங்கு பொருட்களின் வாயிலாக, குடியிருந்த குடியிருப்புக்களை இயற்கையாகக் கிடைத்த சுற்றுச்சூழலுக்கு ஏற்ற பொருட்களைக் கொண்டு அமைத்திருந்ததைப் போன்று அவர்களின் ஆடை அணிகலன்களும் இயற்கையின் தன்மையிலேயே அமைந்திருப்பதை உணரமுடிகிறது. மேலும், அணிகலன்கள் வாயிலாக இவர்களின் பயன்பாட்டில் சங்கு மட்டுமல்லாமல் உலோகத்தால் ஆன அணிகளும் இருந்துள்ளன. இவர்கள் பயணம் மேற்கொள்ளப் பயன்படுத்திய குதிரைகள் பூட்டிய தேர்கள், எருதுகள் பூட்டிய வண்டிகள் ஆகியனவற்றின் வாயிலாக விலங்கினங்களைத் தங்களுக்கு ஏற்றவாறு பழக்கிக் கொண்ட தன்மையினையும், தொழிலுக்குப் பயன்படுத்திய மரக்கலன்கள், வலைக்கருவிகள் ஆகியவற்றின் வாயிலாக கடலுக்குள் செல்லுதற்கு ஏற்ற காலம், கடலுக்குள் செல்லும் தூரம், கடலலைகளின் தன்மை, காற்று வீசும் திசை, பிடித்து வந்த மீன்களின் தன்மை எனப் பல நிலைகளில் அவர்களின் பட்டறிவு வாயிலாக வெளிப்படக் கூடிய நுண்ணறிவுத் திறனையும் அறிந்து கொள்வதற்கு ஏதுவாக உள்ளது. நாவாய் போன்ற மரக்கலன்களின் வாயிலாக அயல்நாடுகளுக்கு வாணிபத்தின் பொருட்டு கடல் கடந்து சென்றுவந்த தன்மையினையும், அயல்நாட்டாரோடு கொண்டிருந்த தொடர்பினையும் அறியஇயலுகிறது. இந்த வகைகளில் எல்லாம் நோக்கும் போது சங்க காலத்தில் வாழ்ந்த நெய்தல் நில மக்கள் பொருளாதார நிலைகளில் மிகவும் மேம்பட்டவர்களாகவும், உடல் வலிமை, மனவலிமை மட்டுமின்றி பல தொழிற்நுட்பத்திறன் வாய்ந்த சிந்திக்கும் வலிமை பெற்றவர்களாகவும் இருந்துள்ளனர் என்பதை அறிய இயலுகிறது.

## References

Dhananjayan, A., (2010) Sanga Ilakkiyamum Panpaattu Soozhaliyalum, New Century Book House, Chennai, India.

Duraisami Pillai, Auvai Su., (2008) Ainkurunooru, Tamilmann Pathippagam, Chennai, India.

Kathiraiverpillai, N., (2009) Tamil Mozhi Agarathi, Saradha pathippagam, Chennai, India.

Manickanar, Va. Suba., (2009) Tamil Kadhal, Sri Hindu publication, Chennai, India.

Perumalsamy, V., (2007) Sangakala Thamizhagathin Samooga Nilai, Bharathi Puthakalayam, Chennai, India.

Robert Sathyajoseph, T., (1996) Samakaalath thamilarkalin uravumurai amaipum uravumuraich sorkalum, Tamil Univeisity, Thanjavur, India.

Victor, Ma.So., (2007) Tholkappiya sinthanaigal, nalathoar pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License